## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களின் 74வது ஆண்டு குடியரசு தினச் செய்தி

வணக்கம்.

74ஆவது ஆண்டு குடியரசு தின விழாவில், தமிழ்நாட்டின் அனைத்து சகோதர சகோதரிக்களுக்கும், உலகெங்கும் வாழ்கிற தமிழ்நாட்டு மக்களுக்கும், என்னுடைய உளப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாளில், நம்முடைய அரசியல் சட்டத்தின் தந்தையான பாபா சாகேப் டாக்டர் பி. ஆர் அம்பேத்கர் அவர்களுக்கு, அபரிமிதமான நுண்ணறிவும், தொலைநோக்கும் செறிந்த எழிலார்ந்த அரசியல் சட்டத்தினைத் தந்தமைக்காக நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம். காலத்தை வென்று நிற்கும் நம்முடைய அரசியல் சட்டமானது, முனைப்புமிக்க பன்மைக் குடியரசாக இந்தியா மலர உதவியுள்ளது.

இந்த நாளில், நாட்டிற்காகத் தங்களின் வாழ்வுகளை அர்ப்பணித்து, நாட்டின் சுதந்திரத்திற்காக எண்ணற்ற கொடுமைகளை அனுபவித்த இந்தியத் தாயின் அன்பு மகன்களையும் மகள்களையும் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறோம். நம் தாய்நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் தங்களின் குருதி, வியர்வை மற்றும் தியாகங்கள் கொண்டு காத்தவர்கள் இவர்கள்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை, மகாகவி சுப்பிரமணிய பாரதியார், வீரமங்கை ராணி வேலு நாச்சியார், மருது சகோதரர்கள், விருப்பாச்சி கோபால நாயக்கர், சுப்பிரமணிய சிவா, மாவீரன் அழகுமுத்துக்கோன், வாஞ்சிநாதன், திருப்பூர் குமரன், தீரன் சின்னமலை, பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், வ.வெ.சு. அய்யர், சிங்காரவேலர், திருமதி ருக்மிணி லட்சுமிபதி, தில்லையாடி வள்ளியம்மை, குயிலி, சுந்தர சாஸ்திரி சத்தியமூர்த்தி, அஞ்சலை அம்மாள், இன்னும் ஏராளமான தியாகசீலர்களையும் நாட்டின் விடுதலை வேள்வியில் இவர்களின் அர்ப்பணிப்பையும் இன்று வணங்குறோம்.

விடுதலை வேள்வியின்போது, அனைத்துக் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு, தியாக சீலர்களுக்கு ஆதரவாக நின்ற இவர்களின் குடும்பத்தாரையும் உற்றார் உறவினரையும் நன்றியோடு நினைவு கூர்கிறோம்.

இந்த நாளில், நம்முடைய ராணுவத்திற்குத் தலைவணங்குகிறோம். பாரதத்தின் இறையாண்மையையும் எல்லை ஒருங்கிணைப்பையும் காத்து, பகைவர்களின் இடையூறுகளை முறியடித்து, அவற்றுக்காகத் தங்களின் நல்லுயிர் ஈந்த வீரமகன்களை நன்றிப்பெருக்கோடு நினைத்துப் பார்க்கிறோம். என்றென்றும் இவர்களை இந்த நாடு நினைவில் வைத்திருக்கும்.

இந்த நாளில், ஆயிரக்கணக்கான காவல்துறை ஆண்களுக்கும் பெண்களுக்கும், மத்திய பாதுகாப்புப் படைகளின் வீரநெஞ்சங்களுக்கும் நாடு வணக்கம் செலுத்துகிறது. எல்லைப் பகுதிகளில் பகைவர்களோடு போரிடுவதில் தங்கள் இன்னுயிர் ஈந்தவர்களையும், உள்நாட்டிலும், சமூகத்திலும் அமைதியையும் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்காக நல்லுயிர் நல்கியவர்களையும் நன்றியோடு எண்ணுகிறது. மதச்சார்பற்ற பன்மைக் குடியரசின் அரசியல் சட்டப் புனித விழுமியங்களைப் பாதுகாப்பதற்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இவர்கள்.

நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு வழிகோலியவர்களும், உணவுத் தட்டுப்பாடு என்னும் நிலையிலிருந்து உணவுப் பெருக்கம் என்னும் நிலைக்குக் கொண்டு வந்தவர்களுமான வேளாண் பெருமக்களுக்கு நாடு நன்றி செலுத்துகிறது. வேளாண் பெருமக்களின் பெரும் பங்கு காரணமாக நம்முடைய உணவு தானிய உற்பத்தி வெகுவாக உயர்ந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றினால் உலகமே துவண்டுபோன கடந்த மூன்றாண்டுகளிலும்கூட, சுமார் 800 மில்லியன் மக்களுக்கு இலவசமாக உணவு தானியம் வழங்குவது நடுவண் அரசுக்கு சாத்தியமானது. நம்முடைய விவசாயப் பெருமக்களின் உதவியினால், அயல் நாடுகள் பலவற்றுக்கும் உணவு

தானியங்கள் வழங்கி, அவர்களின் பசிப்பிணியைப் போக்குவதும் சாத்தியமாகியுள்ளது.

நம்முடைய மருத்துவர்கள், நலவாழ்வுப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் ஆகியோருக்கும், உலகையே ஆட்டிப் படைத்த பெருந்தொற்று காலத்தில், உயிரையே பணயம் வைத்து அவர்கள் செய்த மாபெரும் பணிகளுக்காக நன்றிகள் பல. நன்னம்பிக்கையோடு பெருந்தொற்றை எதிர்கொள்ளும் வகையிலும், பொருளாதார வீழ்ச்சி போன்றதொரு சூழலில் பெரும்பான்மை உலகம் கலங்கிக் கொண்டிருக்கையில், நம்முடைய பொருளாதாரம் மீண்டும் வீறுகொண்டெழும் வகையிலும், மிகக் குறுகிய காலத்தில் கோவிட் தடுப்புமருந்துகளுக்கு வழிவகை செய்த நம்முடைய விஞ்ஞானிகளுக்கும் நம்முடைய நெஞ்சார்ந்த நன்றிகள். திறன்மிக்க, சீரியதொரு தடுப்பூசித் திட்டத்தைச் செயல்படுத்தி, நம்முடைய மக்கட்தொகை முழுமையையும் பாதுகாத்துள்ள நலவாழ்வுச் சகோதரர்கள் அனைவருக்கும் நம்முடைய நன்றிகள் உரித்தாகும்.

தங்களுடைய செயல்பாடுகள் வாயிலாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ள கண்டுபிடிப்பாளர்கள், தொழில் முனைவோர், தொழிலதிபர்கள் ஆகியோருக்கும் நாடு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. வெகு வேகமான பொருளாதார வளர்ச்சியைக் காண்கிற நாடுகளில் நம்முடைய நாடு முன்னணியில் உள்ளது. இதேபோன்று, ஆகச் சிறப்பாக

வளரும் தொழில் தொடக்கச் சூழலமைப்பிலும், உலகிலேயே நாம் முதலிடத்தில் இருக்கிறோம்.

தமிழ்நாட்டின் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும், இத்தருணத்தில் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் மிகச் சிறப்பாகப் பங்களித்து, நம்முடைய மாநிலத்திற்கும் நம்முடைய நாட்டிற்கும் இவர்கள் பெருமை சேர்த்துள்ளார்கள்.

தங்களின் உள்ளார்ந்த சேவை மனப்பான்மையினாலும், முழுமையான முனைப்பினாலும், நலிவுற்றோர்க்கும், வறுமையின் கோரப் பிடிக்குள் தள்ளப்பட்டோர்க்கும், உடல் மற்றும் அறிவுரீதியான மாற்றுத் திறனாளிகளுக்கும், அடித்தள மக்கட்கும் பலவகைகளில் உற்றுழி உதவியிருக்கும் எண்ணற்ற, பெயர் தெரியாத பெருமக்களை மறந்துவிடமுடியாது.

நம்முடன் வசிக்கும் ஆட்டிச நிலையாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குடிமக்களும் கண்ணியத்துடன் வாழ சம உரிமை உள்ளது. அவர்களின் உடல் மற்றும் உளவியல் சார்ந்த மறுவாழ்வு மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்வதில் நாம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவரையும், மாமுனிவர்களான பதஞ்சலி, கோரக்கர், திருமூலர்

போன்றோரையும், உயர்சான்றோரரான நாயன்மார்கள் மற்றும் ஆழ்வாராதிகளையும், கோதைப் பிராட்டியாம் ஆண்டாள் நாச்சியாரையும், ஔவைப் பாட்டியையும், எம்பெருமானார் இராமானுசரையும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் மரபுக்கும் ஆன்மீகத்திற்கும் தமிழர் நாகரிகத்திற்கும் அரும்பெரும் பங்களித்து, பாரதத்தின் ஒருமித்த சிந்தனையையும் அடையாளத்தையும் ஒருமுகப்படுத்த உதவிய சான்றோர் பெருமக்களையும் நிரம்ப மரியாதையோடு இவ்வேளையில் எண்ணிப் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழர்தம் பெருமிதத்திற்குப் பெருங்காரணமான சங்கத் தமிழ்ப் புலவோரையும் அவர்தம் புலமையையும் இத்தருணத்தில் மகிழ்வோடு நினைவு கூர்கிறோம். தமிழிலக்கியத்தின் மெய்யறிவு மாண்புக்கும் பண்பாட்டுச் செழுமைக்கும் காரணமான புலமை மரபு, நெடுங்காலமாகத் தொடரும் தமிழ் நாகரிகத்தைப் பெரிதும் வளப்படுத்தியுள்ளது என்பதை நாம் அறிவோம். சேர சோழ பாண்டிய மூவேந்தர்களையும் பல்லவ மன்னர்களையும், அவர்களால் ஆதரிக்கப்பெற்ற கலை-கைதொழில் விற்பன்னர்களையும் அன்போடு நினைவு கூர்கிறோம். தமிழ்ப் பண்பாட்டிற்கும் தமிழர்தம் அடையாளத்திற்கும் நிலைக்களன்களாகத் திகழும் மேன்மைமிகு திருக்கோயில்களையும் ஆன்மீகத் தலங்களையும் நமக்குத்

தந்த இப்பெருந்தகையாளர்களுக்கு நம்முடைய நன்றிகள் உரித்தாகுக.

நண்பர்களே, நம்முடைய மகத்தான கடந்தகாலத்தை எண்ணி நாம் பெருமைபடவேண்டும். ஆக்கிரமிப்பு மிக்க பல்வேறு படையெடுப்புகளும் காலனித்துவங்களும் இடங்களுக்கும் பொருட்களுக்கும் பௌதிகச் சேதங்களை ஏற்படுத்தியிருந்தாலும், நம்முடைய பண்பாட்டையோ ஆன்ம உணர்வுகளையோ, ஆன்மீகத்தையோ அவற்றால் சிதைக்கமுடியவில்லை. பாரதத்தின் பெருமிதத்தை மீண்டும் தழைக்கச் செய்வது நம்முடைய கடமையாகும். இத்தகைய மீளுருவாக்கத்தில், தமைமை நிலையில் தமிழ்நாடு திகழ்கிறது. இதற்குக் காரணம், பல்லாயிரம் ஆண்டுகாலத் துடிப்புமிக்க வளமார்ந்த நாகரிக மரபு மட்டுமன்று; சுகாதாரம், கல்வி, உள்கட்டுமானம், தொழிலக ஆதாரம், திறன்மிக்க மனித வளம் ஆகிய துறைகளில் தமிழ்நாடு கண்டுள்ள மேம்பாடுகள், இந்தியாவின் மீள் எழுச்சியில் முன்னணி வகிக்கும்.

நண்பர்களே, இன்றளவில், மூன்றாவது உலக நாடாக இந்தியா காணப்படுவதில்லை. ஒவ்வொரு உலகளாவிய அல்லது பன்முனை அரங்கிலும், இந்தியாவிற்குப் பெருமைமிக்கதொரு இடம் இருக்கிறது; இந்தியத் தலைமை கூர்ந்து செவிமடுக்கப்படுகிறது. கடந்த காலங்களைப் போலல்லாமல், உலகெங்குமுள்ள இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினருக்கான நன்மைகளைப்

பாதுகாப்பதற்கான திறமை இப்போது நமக்குள்ளது. அயல்வாழ் தமிழர் குறித்து நாடு பெருமிதம் கொள்கிறது. நீங்கள் எங்கிருந்தாலும், உங்களோடு இந்த நாடு துணை நிற்கும் என்பதையும், உங்களின் நியாயமான ஆர்வங்களையும், நலன்களையும் பாதுகாக்கும் என்பதையும் இந்தத் தருணத்தில் உங்களுக்கு உறுதிகூற விழைகிறேன்.

புதிய இந்தியாவின் எழுச்சியில், உலகெங்குமுள்ள தமிழர்களுக்கும் தமிழ் வம்சாவளியினருக்கும் மிக முக்கியமான பங்குள்ளது. அசாதாரணமான அறிவுநுட்பத்தினாலும், அயராத உழைப்பினாலும், தாங்கள் வசிக்கும் நாடுகளின் விலைமதிப்பற்ற வளங்களாக அவர்கள் விளங்குகின்றனர். இந்தியாவிற்கும் நிரம்ப மேன்மையைச் சேர்த்துள்ளனர். இந்த ஆண்டு, ஜி-20 தலைமைப் பீடத்தில் இந்தியா உள்ளது. நம்முடைய உலகளாவிய உறவுகளை உறுதி செய்துகொள்ளவும், பல்வேறு நாடுகளின் குடிமைச் சமூகங்களோடான நம்முடைய இணக்கங்களைச் செம்மைபடுத்திக் கொள்ளவும் இதுவொரு நல்வாய்ப்பாகும். இந்தியத் தன்மையையும் இந்தியப் பெருமிதத்தையும் உலகிற்கு வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் இதுவே ஆகும். இத்தகைய செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு, அயல்வாழ் தமிழரே தக்கவர் ஆவர்.

அண்டைநாடுகளோடு அணுக்கம் என்னும் கொள்கையின் வழியில், இலங்கையோடு நாம் நெருக்கமான உறவு கொண்டுள்ளோம். இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கும் முனைப்பிலும் உள்ளோம். அவர்களின் தேவைக்காலங்களில், உதவிக்கரத்தை முதலில் இந்தியாவே நீட்டும். இலங்கைக்கான இந்தியாவின் மேம்பாட்டு உதவியானது சுமார் 5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்; இதில், 600 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதியுதவி என்பதும், அதிலும் கணிசமான அளவு இலங்கைத் தமிழரின் பயன்பாட்டுக்காக என்பதும் குறிப்பிடத்தக்கவை.

திரு.மோடிஜி அவர்கள் பிரதமர் பொறுப்பேற்றதிலிருந்தே, இலங்கையிலுள்ள தமிழர்களின் நலன்களின்மீது தனிக் கவனம் செலுத்தி வருகிறார். தோட்டப் பகுதிகளில் கட்டப்பெற்ற 15,000 வீடுகள் உட்பட ஏறத்தாழ 60,000 வீடுகள், வவுனியா, பொது மருத்துவமனையில் 200 படுக்கைகள் கொண்ட வார்டு வளாகம், டோக்கோயாவில் 150 படுக்கை வசதி கொண்ட உயர்சிறப்பு மருத்துவமனை, 11 மில்லியன் அமெரிக்க டாலர் செலவினத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன உயர்நிலை வசதிகளுடனான யாழ்ப்பாண பண்பாட்டு மையம், வடக்கு மாகாணத்தில் கட்டப்பெற்றுள்ள 27 பள்ளிக்கூடங்கள், கண்டி சரஸ்வதி மையக் கல்லூரியின் மேம்பாடு, மன்னார் திருக்கேதேசுவரத் திருக்கோயில் திருப்பணி, வடக்கு

மாகாண இருப்புப்பாதை உள்கட்டுமான முன்னேற்றங்கள், வடக்கு மாகாண துரையப்பா விளையாட்டரங்கச் சீரமைப்பு, முழுமையான அவசர கால ஆம்புலன்ஸ் சேவைகள் ஆகிய ஆக்கங்களை இங்கு நினைவு கூரலாம்.

இலங்கையின் சமீபத்திய பொருளாதாரச் சிக்கல் மற்றும் உணவுத் தட்டுப்பாட்டுக் காலங்களில், தக்க உதவிகளோடு இந்தியா உடனடியாக உதவிக்கரம் நீட்டியது. மனித நேய உதவிகளை காலந்தாழ்த்தாது வழங்கிய தமிழ்நாடு அரசும்,174 கோடி ரூபாய் மதிப்பிலான அரிசி, பால் பவுடர் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை அளித்துப் பெரும்பங்காற்றியது.

இந்திய அரசாங்கத்தின் தளரா முயற்சிகளின் விளைவாக, இன்றளவில், எந்த இந்திய மீனவரும் இலங்கையின் கட்டுக்காவலில் இல்லை.

உலகின் மிகப் பழமையான வாழ்மொழி என்று சொல்லத்தக்கதும், வளமான இலக்கிய – தத்துவார்த்த மரபுகளை உள்ளடக்கியதுமான தமிழ்மொழியானது, இந்தியாவின் தனிப்பெருமை ஆகும். விலைமதிப்பு உரைக்கவியலா இந்தச் செல்வத்தின் பயன், நாடு முழுமைக்கும் கிட்டவேண்டும். தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கான மாண்புமிகு பாரதப் பிரதமரின் முனைப்புகளின் விளைவாக, நாடு முழுவதும் தமிழ் மொழியைப் பற்றிய விழிப்புணர்வு அதிகப்பட்டுள்ளது. காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி

மேம்பாட்டுக்காகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள சுப்பிரமணிய பாரதியார் இருக்கை, உயர் குடிமைப் பணிகளுக்கான ஒன்றியத் தேர்வாணையத் தேர்வுகளைத் தமிழில் எழுதுவதற்கான வசதி ஆகியவற்றோடுகூட, மத்திய அரசாங்கத் துறைகளில் கீழமைப் பணிகளுக்கான பணியாளர்களைத் தேர்வு செய்யும் தேர்வாணையமும் விண்ணப்பதாரர்களுக்குத் தமிழ் மொழியை விருப்ப மொழியாக அங்கீகரித்துள்ளது. நம்முடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இதனால் கூடுதல் வாய்ப்புகள் கிடைக்கும். சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிவழங்கல் மற்றும் வழக்காடலுக்கான மொழியாகத் தமிழை நிலைப்படுத்துதற்கு இந்திய அரசாங்கம் முயன்று வருகிறது.

காசி இந்துப் பல்கலைக்கழகத்திற்குச் சமீபத்தில் நான் சென்றபோது, பல்கலையில் பணியாற்றும் தமிழர்களோடும், தமிழில் பட்டயக் கல்வி பயிலும் தமிழரல்லாத மாணவர்களோடும் உரையாடினேன். தமிழ் மொழியைப் பயில்வதில் தமிழரல்லாத மாணவர்களுக்கிருக்கும் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

காசியில், கங்கை நதியின் படகோட்டிப் பெருமக்கள், சரளமாகத் தமிழில் பேசுவதைக் கேட்டுக் களிப்படைந்தேன். சமீபத்தில் ஒருமாத காலம் நடைபெற்ற மாண்புமிகு பிரதமர் மோடிஜி அவர்களின் சிறப்புத் திட்டமான காசி தமிழ்ச்

சங்கமம், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோருக்குக் காசி செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததோடு, நாட்டின் பிற பகுதிகளுக்குத் தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் பரவுவதற்கான பெரிய உந்துதலையும் தந்தது.

காசிக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான பல்லாண்டுகால பண்பாட்டுத் தொடர்புகள் புதுப்பிக்கப்பெற்றன. பல நூற்றாண்டுகளாக காசியில் வாழ்ந்துவரும் ஏறத்தாழ 40,000 தமிழர்கள், இந்த எழுச்சிக்கு மேலும் உதவினர். உலகப் பொது மறையான திருக்குறளின் மொழிபெயர்ப்புகளைப் பல்வேறு மொழிகளில் பாரதப் பிரதமர் அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் துடிப்பும் தொலைநோக்கும் கொண்ட தலைமையின்கீழ், புதிய இந்தியா உருவாகிக் கொண்டிருக்கிறது; தன்னம்பிக்கையும் திறமையும் கொண்ட இந்தியா, மேலும் தற்சார்பு கொண்ட இந்தியா, தன்னுடைய மேன்மைமிக்க மரபைப் பற்றிய பெருமிதம் கொண்ட இந்தியா, 2047-ல் உலகத் தலைமை ஏற்கவிருக்கும் தனது சிறப்பை உணர்ந்துள்ள இந்தியா, வசுதைவ குடும்பகம் என்னும் உறவுக் கொள்கையில் ஈடுபாடு கொண்டுள்ள இந்தியா! நுண்புரட்சிகள் பலவற்றின் வாயிலாக புதிய இந்தியாவின் உதயம் நிகழ்ந்துகொண்டுள்ளது – ஏழைகளுக்கான நலவாழ்வு வசதிகள், அனைவருக்குமான தரமும் திறனாதாரமும்

கொண்ட கல்வி, ஒவ்வொரு இல்லத்திலும் கழிப்பறை உள்ளிட்ட தூய்மைச் சேவை, ஒவ்வொரு இல்லத்திற்கும் குடிநீர் வசதி, ஒவ்வொரு இல்லத்திற்கும் சமையல் வாயு மற்றும் மின் வசதிகள், வேளாண் பெருமக்களுக்கு வேண்டிய வசதிகள் மற்றும் மேம்பாடு, இயற்கைவழி விவசாய முனைப்புகள், ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைய வசதி, ஒவ்வொரு குடும்பத்தையும் நிதி உள்ளீட்டில் இணைத்தல், ஒரு நாடு-ஒரு குடும்ப அட்டை அமைப்பு, பெண் குழந்தைகள் கல்வி மற்றும் பாதுகாப்பு, தாய்மார்களுக்கு சிறப்பு ஊட்டம் மற்றும் நலவாழ்வு வசதிகள், புதுமைகளை உருவாக்கவும் செயல்படுத்தவும், இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள், புதிய தொழில் முனைப்புகளில் இதுவரை காணாத வளர்ச்சி, வருமான வரிக் கட்டமைப்புகளில் குடிமக்கள் காட்டுகிற தன்னார்வச் செயல்பாடுகள், முழுமையான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள், பாலினச் சமனின்மைத் திருத்தங்கள், ராணுவம்-பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் மகளிர் சக்தி ஊக்கம் – இவையாவும் புதிய இந்தியாவின் உதயத்திற்கு வழிகோலும் புரட்சிகள்.

நண்பர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தில், நம்முடைய மாநிலமான தமிழ்நாடு முன்னணிப் பங்கேற்பில் உள்ளது என்பதற்காக மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய நேர்மறைப் புரட்சிக்கு மேலும் உந்துதல் வழங்கவேண்டும்.

இந்தியா, ஜி-20வுக்குத் தலைமை ஏற்றுள்ளது. உலகளாவிய ஜி டி பி-யில் 85 விழுக்காட்டைக் கொண்டுள்ள ஜி-20 நாடுகளுக்கு, உலகின் வருங்காலத்தை நிர்ணயிப்பதில் உள்ள முக்கியத்துவத்தை நாம் யாவரும் அறிவோம். ஜி-20 உறுப்பு நாடுகளுக்கும் சரி, உலக முழுமைக்கும் சரி, இந்தியாவிடம் வருங்காலம் குறித்த எதிர்பார்ப்புகள் அதிகம் உள்ளன. இந்திய அரசின் பிற திட்டங்களைப் போலவே, ஜி-20 தலைமையையும் மக்கள் இயக்கமாகவே நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். 215க்கும் மேற்பட்ட ஜி-20 நிகழ்வுகள் நாடெங்கும் நிகழவுள்ளன. நம்முடைய மாநிலத்திலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டின் பெருமைகளைப் பிறருக்கு எடுத்துக்காட்டும் வாய்ப்புகளாக இந்நிகழ்ச்சிகள் விளங்கும். நம்முடைய இளைஞர்கள், மகளிர் உள்ளிட்ட தொழில் முனைவோர், நம்முடைய குறு- சிறு- மத்திய தொழிலமைப்புகள், கலை-பண்பாடு-ஆன்மீக நிறுவனங்கள், அயல் வாழ் தமிழர் ஆகிய அனைவரையும் இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும்படியும், நம்முடைய தமிழ் மொழியும் தமிழ்க்கலையும் எவ்வளவு வளமையானவை என்பதையும் நம்முடைய ஆன்மீகம் எத்தகைய உள்ளணைப்பு கொண்டது என்பதையும் உலகுக்கு வெளிப்படுத்தும்படியும் வேண்டிக் கொள்கிறேன்.

நண்பர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பயணத்தில் முன்னோக்கிச் செல்லும்போது, நம்முடைய எழுச்சியையும்

வளர்ச்சியையும் தடைப்படுத்தித் தாமதப்படுத்தக்கூடிய அழுத்தங்கள் குறித்தும் நாம் கவனமாக இருக்கவேண்டும். புதிய இந்தியாவின் உதயத்தையும் எழுச்சியையும் விரும்பாத புற அழுத்தங்களும் உள்ளார்வக் குழுக்களும் உள்ளன. பிரிவினை மற்றும் கற்பனைச் சிக்கல்களை உருவாக்கியும் உயர்த்திப் பிடித்தும் இவை நம்முடைய வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்க முயல்கின்றன. நம்முடைய சமூக, இன-மத மற்றும் வட்டார நல்லிணக்கங்களைச் சிதைப்பதற்கு இவை கங்கணம் கட்டிக்கொண்டாற்போல் உள்ளது. இவற்றில் சில அமைப்புகள், பயங்கரவாதச் செயல்களிலும் ஈடுபடுகின்றன. பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா என்னும் இயக்கம், இப்படிப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். சமூக நல்லிணக்கத்தைச் சேதப்படுத்துவதற்கும் அரசியலமைப்பு நிரலைச் சிதைப்பதற்கும் ஈடுபடுத்திக்கொண்டுள்ள இந்த அபாயகர அமைப்புக்கு வெளியிலிருந்து நிதி கிடைக்கிறது; சர்வதேச பயங்கரவாத அமைப்புகளோடு இதற்குத் தொடர்புகளும் உள்ளன. துரதிருஷ்டவசமாக, தமிழ்நாட்டில் இந்த அமைப்பின் இருப்பு சற்றே வலிமையானதாகும். இந்த அமைப்பிற்கு இந்திய அரசாங்கம் தடை விதித்தவுடன், பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தும் துணிச்சல் இதற்கு இருந்தது என்பதை நாம் அறிவோம். கோயம்புத்தூரில் நிகழவிருந்த மிகப் பெரிய பயங்கரவாதத் தாக்குதல் தடுக்கப்பட்டுவிட்டாலும்கூட, சர்வதேச பயங்கரவாதிகளோடு இவ்வமைப்பிற்கு இருக்கும்

தொடர்பை உறுதிப்படுத்துகிறது. சட்ட அமலாக்க முகமைகள் இப்படிப்பட்ட அமைப்பினை மிகக் கவனமாகக் கண்காணித்து ஒடுக்கவேண்டும் என்பது ஒருபுறமிருக்க, இத்தகையவற்றில் நம்முடைய குடிமக்களும் கவனமாகவும் விழிப்போடும் இருக்கவேண்டும்; பயங்கரவாதச் செயல்பாடுகள் குறித்த தகவல்களோ, செய்திகளோ தெரிந்தால் அல்லது ஐயம் ஏற்பட்டால், சட்ட முகமைகளுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தவேண்டும்.

வருங்காலம் நோக்கிய நம்முடைய பயணத்தில், மகளிர் திறனை நாம் முறையாகப் பயன் கொள்ளுதல் அவசியம். நம்முடைய சமுதாயத்தின் எந்தவொரு பகுதியினரோ குழுவோ ஒதுக்கப்படுதலையோ பின் தங்கச் செய்தலையோ நாம் அனுமதிக்கக்கூடாது. பட்டியலின மற்றும் பழங்குடியினச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் சிறப்பு கவனம் அளிக்கவேண்டும். பெண்கள், பட்டியலினத்தார், பழங்குடியினர் ஆகியோருக்கு ஆற்றலை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், இவர்களுக்கு எதிரான குற்றங்களில் அதிவிரைவாக நீதி வழங்கவும் உறுதி செய்யவேண்டும். பெண்களுக்கெதிரான குற்றங்களில், குறிப்பாக தலித் பெண்டிருக்கு எதிரான கற்பழிப்பு வழக்குகளில் காணப்படுகிற குறைவான தண்டனை வீதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. பெண்களுக்கும் தலித் மக்களுக்கும் எதிராகக் குற்றமிழைப்பவர்கள், நீதியின் முழுமையான வீச்சில் தண்டிக்கப்படவேண்டும்.

நண்பர்களே, நம்முடைய பண்டைய திருக்கோயில்கள், நம்முடைய பாரம்பரியப் பெருமைகளாகும்; இவை நம்முடைய அடையாளமும்கூட! நம் பாண்பாட்டின் விளைநிலங்களும், ஊற்றுக்கண்களும் கோயில்களே ஆகும். கோயிலின் ஆன்மா, ஆன்மீகம்; நாட்டியம், இசை, பண்கள், பாடல்கள் உள்ளிட்ட தமிழ்க் கலை மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் ஆன்மாவும் ஆதாரமும் ஆன்மீகமே ஆகும். நம்முடைய கோயில்களைக் கலை-பண்பாட்டு இடங்களாக மட்டுமே சிலர் காண்கின்றனர்; விவரிக்கின்றனர். இது மிகுதியும் நியாயமற்றது. ஆன்மீகம் இல்லையென்றால், கோயிலில் ஆன்மா இல்லை; ஆன்மா இல்லாத உடல் என்னவாகும்? வெற்றுச் சடலமாகும் இல்லையா? அப்படித்தான், ஆன்மீகம் இல்லாத ஆலயங்கள்! திருக்கோயில்களைப் பற்றிய இப்படிப்பட்ட குறைநோக்கம், கம்பீரமான நம்முடைய பாரம்பரியத்தை மட்டுமல்லாமல், நம்முடைய பண்பாட்டையும் அடையாளத்தையும்கூட அழித்துவிடும். நம்முடைய திருக்கோயில்களை, அவற்றின் முழுமையில் நாம் பாதுகாக்கவேண்டும். இந்த வகையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அமைத்துள்ள யுனெஸ்கோ ஆணையத்தின் கோயில் பராமரிப்பு பற்றிய கருத்துகளும், நீதிமன்றத்தின் முக்கிய ஆணைகளும் நம்முடைய உடனடி கவனத்திற்கு உரியவை.

என்னருமைத் தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளே, நம் நாட்டின் வரலாறு மற்றும் உலக வரலாறு ஆகியவற்றின் திருப்புமுனைத் தருணங்களில் இப்போது நாம் இருக்கிறோம். இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து உருவானதும் தற்போது நிலவுவதுமான உலக நிரல்முறை, இருக்கின்ற சவால்களைச் சந்திப்பதற்கு மிகுதியும் குறை மலிந்ததாகும்; வானிலைச் சிக்கல்கள், பேரழிவு ஆயுதங்களின் பெருக்கம், சிதிலமாக்கும் போர்கள், உலகளாவிய பெருந்தொற்று போன்ற சவால்களைச் சந்திப்பதற்குப் போதுமானதன்று. சொல்லப்போனால், இப்போதைய உலக நிரல்முறையின் விளைவுகளே இச்சவால்களும்கூட எனலாம். பாதுகாப்பும் செயல்தொடர்பும் கொண்ட வருங்காலத்தை உருவாக்குவதில் இந்தியா முன்னின்று வழிநடத்தவேண்டுமென்னும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் உலகம் முழுமைக்கும் உள்ளது. பல வழிகளில், நம்முடைய தலைமைப் பொறுப்புகளை நாம் நிறைவேற்றத் தொடங்கிவிட்டோம். உலகின் நம்பிக்கையையும் எதிர்ப்பார்ப்பையும் முறையாக நிறைவேற்றுவதற்கு, இந்தியா முழுமையாக வளர்ச்சியடைதலும் தற்சார்பு பெறுதலும் அவசியம். ‘இந்தியாவில் செய்வோம்’ (மேக் இன் இந்தியா) மற்றும் ‘உள்ளூருக்குக் குரல்’ (வோகல் ஃபார் லோகல்) ஆகிய திட்டங்களும் முன்னெடுப்புகளும், ஊக்கமிகு விளைவுகளைத் தரத் தொடங்கிவிட்டன. பாதுகாப்புத் துறை உள்ளிட்ட முனைப்புகள் பலவற்றில்,

தற்சார்பை நோக்கி நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய நாட்டின் வெற்றிப் பயணத்தில் பெருமிதமிக்க சாட்சிகளாகவும் ஈடுபாடுமிக்க பங்கேற்பாளர்களாகவும் நாம் விளங்குகிறோம்; இது நமது நல்லதிர்ஷ்டம், நல் வாய்ப்பு. இந்த நல்வாய்ப்புச் சூழலை, செய்யும் ஒவ்வொரு செயலிலும் எண்ணிப்பார்க்கவேண்டுமென்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர்களே, நமக்கான அடிப்படை உரிமைகளை நமது அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்கிறது. அதே சமயம், நம்முடைய அடிப்படைக் கடமைகளை நாம் நிறைவேற்றவேண்டும் என்றும் அரசியலமைப்புச் சட்டம் எதிர்பார்க்கிறது. இந்த நல்ல தருணத்தில், நம்முடைய அரசியலமைப்புச் சட்டக் கடமைகளுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். இதுவே, நம்முடைய விடுதலைப் போராளிகளின் கனவுப்படியான இந்தியாவை நனவாக்கும் வழியுமாகும்.

மீண்டும், 74ஆவது குடியரசுத் திருநாள் வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

வாழ்க தமிழ் நாடு,

வாழ்க பாரதம்.

*****